சுற்றறிக்கை இலக்கம்:- …………………………

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல பிரிவுகளுக்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல பாடசாலை அதிபர்கள்

**க.பொ.த.(உ.த.) கற்பதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவ மாணவிகளுக்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் சனாதிபதி நிதியம் ஆகியன ஒன்றிணைந்து வழங்கும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் 2024/2025**

2022(2023) க.பொ.த.(சா.த.) பரீட்சைக்குத் தோற்றி அப்பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.(உ.த.) கற்பதற்கான தகைமைகளைப் பெற்று **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்கும்** மாணவர்/ மாணவிகளுக்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் சனாதிபதி நிதியம் ஆகியன ஒன்றிணைந்து நாடு முழுவதும் அமைந்துள்ள 100 கல்வி வலயங்களில் இருந்து தெரிவுசெய்யப்படும் மாணவ மாணவிகளுக்காக 5,000 புலமைப்பரிசில்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை கௌரவ சனாதிபதியவர்களின் சிந்தனைக்கு அமைவாக நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் அனைத்து கல்வி வலயங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் இதன் கீழ் ஒரு கல்வி வலயத்திற்கு உரித்தாகும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 50 ஆகும். இருப்பினும் வலயம் ஒன்றுக்காக புலமைப்பரிசில் வழங்குவதற்கு தகைமையுள்ள போதுமான அளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாவிடின் அந்த வலயத்துக்காக ஒதுக்கப்பட்ட புலமைப்பரிசில் எண்ணிக்கையில் மீதியாகவுள்ள புலமைப்பரிசில்கள் ஏனைய வலயங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற தகைமையுள்ள புலமைப்பரிசில் விண்ணப்பங்களின் புள்ளி மட்டங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு அந்த வலயங்களுக்காக ஒதுக்கப்படும். இதற்குத் தகைமை பெறும் புலமைப்பரிசில் பெறுநர்களுக்கு 2024 மே மாதம் முதல் க.பொ.த(உ.த) பரீட்சைக்குத் தோற்றும் மாதம் வரை அல்லது உயர்ந்தபட்சம் 24 மாதங்களுக்கு உட்பட்டு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

## 01. புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகைமைகள்

1.1 2022 (2023) ஆம் ஆண்டில் க.பொ.த.(சா.த.) பரீட்சைக்குத் தோற்றி அப்பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.(உ.த.) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவர்/ மாணவியாக இருத்தல்.

1.2 அரச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்/மாணவியாக இருத்தல்.

1.3 விண்ணப்பதாரரின் குடும்ப மாத வருமானம் ரூ.100,000/- வினை விஞ்சாதிருத்தல்.

**கவனிக்க:** ஏற்கனவே விண்ணப்பம் கோரப்பட்டுள்ள சனாதிபதி புலமைப்பரிசிசல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள க.பொ.த(உயர்தரம்) இற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவ மாணவிகள் அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டிருப்பின் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவ்வாறு மாகாண மட்டத்தில்/ வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவ மாணவிகளின் பெயர் பட்டியல் சனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ Face Book பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## 02. விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல்.

2.1 இந்த புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்ப படிவம் (இணைப்பு 01) மற்றும் அதற்குரிய அறிவுறுத்தல் பத்திரம் (இணைப்பு 02) ஆகியவற்றை தமது பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துவதற்கு அதிபர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.2 அனைத்து பாடசாலை அதிபர்களும் இப்புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 2022 (2023) ஆம் ஆண்டில் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சித்தியடைந்து தற்போது க.பொ.த.(உ.த.) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்கும் அனைத்து மாணவ மாணவிகளை அறிவூட்டுதல் வேண்டும்.

2.3 இது தொடர்பான மேலதிக விபரம் மற்றும் விண்ணப்பப்படிவங்களை சனாதிபதி நிதியத்தின் www.presidentsoffice.gov.lk, கல்வி அமைச்சின் www.moe.gov.lk ஆகிய இணையதளங்கள் மற்றும் சனாதிபதி நிதியத்தின் Face Book பக்கமான www.facebook.com/ president.fund ஆகியவற்றில் உரிய கால எல்லைக்குள் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

2.4 மேலே இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவ மாணவிகள் உரிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவத்திற்கேற்ப **(இணைப்பு 01)** விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தமது வகுப்பாசிரியர்/ வகுப்பாசிரியையின் ஒப்பத்துடன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதென உரிய பாடசாலை அதிபரால் உறுதிசெய்யப்படல் வேண்டும். புலமைப்பரிசில் விண்ணப்பத்திற்காக வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை உறுதிசெய்வதற்காக கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளை அதிபர் உறுதிப்படுத்தி புலமைப்பரிசில் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.5 விண்ணப்பதாரரின் குடும்ப மாத வருமானம் கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் விண்ணப்பப்படிவத்திலேயே உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வருமான அறிக்கையினை பெறத்தேவையில்லை.

2.6 மேலே 2.4 மற்றும் 2.5 பரிந்துரை/ ஒப்பத்துடனான விண்ணப்பங்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2.7 அனைத்து புலமைப்பரிசில் பெறுநர்களினதும் பெயரில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கியில் வங்கிக் கணக்கு காணப்படல் வேண்டும் என்பதுடன் அந்த சேமிப்புக் கணக்கின் தகவல்கள் உள்ளடங்கிய பக்கம் மற்றும் மாணவர்/ மாணவியின் தேசிய அடையாள அட்டையின் தெளிவான பிரதி உரிய பாடசாலையின் அதிபரால் உறுதிசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2.8. அதன் பிரகாரம் அனைத்து சான்றிதழ்களினதும் உறுதிசெய்யப்பட்ட பிரதிகளுடன் உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **2024 மே மாதம் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** பின்வரும் முகவரியில் அமைந்துள்ள சனாதிபதி நிதியத்துக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,
சனாதிபதி நிதியம்
இல.35, 3 ஆம் மாடி,
லேக்ஹவுஸ் கட்டிடம்,
டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தை
கொழும்பு 10

2.9 அவ்வாறே விண்ணப்பபடிவம் சமர்ப்பிக்கப்பட்ட கடிதவுறையின் இடப்பக்க மேல் மூலையில் ‘‘பாடசாலையின் பெயர் மற்றும் கல்வி வலயம்’’ தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

## 03. தெரிவு செய்யும் முறை

3.1 உரிய திகதிக்கு முன்னர் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட புலமைப்பரிசில் விண்ணப்பங்களை சனாதிபதி நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றவுடன் அந்த விண்ணப்பங்களை வலய மட்டத்தில் தரம் பிரித்து உரிய அடிப்படைத் தகைமைகள், அளவுகோல் மற்றும் புள்ளி வழங்கும் நடைமுறை ஆகியவற்றின் பிரகாரம் தெரிவுசெய்யப்படும் புலமைப்பரிசில் பெறுநர்களின் பெயர் பட்டியல் தயாரிக்கப்படும்.

3.2 தெரிவுசெய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர்களின் பெயர் பட்டியலை 2024 மே மாதம் 30 ஆம் திகதி சனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ Face Book பக்கத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இப் பணிகள் நிறைவடைந்தவுடன் புலமைப்பரிசில் பெறுநர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 04. அளவுகோல் மற்றும் புள்ளி வழங்கும் நடைமுறை

விண்ணப்பதாரி ஒருவருக்கு பெற்றுக்கொள்ள முடியுமான ஆகக்கூடிய புள்ளிகள் 100.

### 4.1 குடும்பம் பற்றிய தகவல்கள் (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01)

| | | |
|---|---|---|
| 4.1.1 | குடும்பத்தின் 21 வயதுக்குட்பட்ட இரண்டு பிள்ளைகள்/ அதற்கு மேல் | 04 புள்ளி |
| 4.1.2 | பெற்றோர் இருவரையும் இழந்திருத்தல் | 06 புள்ளி |
| 4.1.3 | பெற்றோர் இல்லாது பாதுகாவலர் ஒருவருடன் இருத்தல் (அவ்வாறாயின், சட்டரீதியான பாதுகாவலர் என்பதனை உறுதிசெய்யும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.) | 02 புள்ளி |
| 4.1.4 | பெற்றோரில் ஒருவரை இழந்திருத்தல் | 03 புள்ளி |
| 4.1.5 | மாணவன்/மாணவியின் முழுமையான அங்கவீன நிலைமையின் போது (பகுதியளவில் அங்கவீனமுற்றிருந்தால் 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கப்படும்) | 10 புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 25)

**கவனிக்க:-** பெற்றோரில் தங்கிவாழும் 21 வயதிற்குற்பட்ட திருமணமாகாதவர்கள் பிள்ளைகளாக கருதப்படுவார்கள். உடல் ரீதியான குறைபாடு தொடர்பில் அரச மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் சான்றளித்தல் வேண்டும்.

### 4.2 க.பொ.த.(சா.த.) பரீட்சைப் பெறுபேறுகள் (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 02)

4.2.1 க.பொ.த.(சா.த.) பரீட்சையின் கருப் பாடங்கள் தொடர்பில்

| | | | |
|---|---|---|---|
| விசேட சித்தி | (A) | - | 08 புள்ளி |
| அதி திறமைச் சித்தி | (B) | - | 06 புள்ளி |
| திறமைச் சித்தி | (C) | - | 04 புள்ளி |
| சாதாரண சித்தி | (S) | - | 02 புள்ளி |

4.2.2 **தொகுதிப் பாடங்கள் தொடர்பில் ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 02 பாடங்களுக்கு 02 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.**

(ஆகக் கூடிய புள்ளிகள் 50 )

### 4.3 விளையாட்டு (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 03)

கரப்பந்து/ வலைப்பந்து/ கால்பந்து/ கூடைப்பந்து/ கிரிக்கெட்/ எல்லே/ பட்மிட்டன்/ கபடி/ றகர்/ ஹொக்கி/ மெய்வல்லுநர் விளையாட்டு/ செஸ்/ கரம்/ டென்னிஸ்/ நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராத்தே/ மேசைப்பந்து/ ஏனையவை

| | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| • முதலாமிடம் | 05 | 07 | 09 |
| • இரண்டாமிடம் | 04 | 05 | 08 |
| • மூன்றாமிடம் | 02 | 03 | 06 |
| • தலைமைத்துவம் | 01 | 01 | 01 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 10)

### 4.4 அழகியல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 04)

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனையாளர் போட்டித்தொடர்
- தேசிய மொழிகள் மற்றும் இலக்கியப் போட்டி/ விவாதம்/ பேச்சு/ அறிவிப்பாளர்/ அறிவுப்போட்டி/ ஓவியம்/ நடனம்/ இசைக்கருவி இசைத்தல்/ பாடல்/ மேடை நாடகம் விடய சாதனைகள்
- மாணவ படையணி/ சாரணர்/ முதலுதவி/ சூழலியல் சார்ந்தவை/ ஏனையவை

| | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| • முதலாமிடம் | 05 | 07 | 09 |
| • இரண்டாமிடம் | 04 | 05 | 08 |
| • மூன்றாமிடம் | 02 | 03 | 06 |
| • தலைமைத்துவம் | 01 | 01 | 01 |

**4.5** **<u>மாணவர் தலைமைத்துவம் (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 05)</u>**

பாடசாலை முதன்மை மாணவ தலைவர்/ உப முதன்மை மாணவ தலைவர் - 05 புள்ளி
மாணவ தலைவர் ( சிரேஷ்ட/கனிஷ்ட) - 04 புள்ளி
வகுப்புத் தலைவர் - 02 புள்ளி
(ஆகக் கூடிய புள்ளிகள் 05)

**கவனிக்க :-**

- மேலே 4.3 மற்றும் 4.4 ஆகியவற்றில், மாணவர்/மாணவி ஒருவருக்கு ஒரே இணைப்பாடவிதான செயற்பாட்டிற்காக தேசிய, மாகாண மற்றும் வலயம் ஆகிய மட்டங்கள் அனைத்திற்கும் புள்ளிகள் வழங்கப்படலாகாது. புள்ளிகள் வழங்கப்படும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டம் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
- மேலே 4.5 இல் புள்ளி வழங்கும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டம் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

## 05. புலமைப்பரிசில் வழங்குதல்

5.1 இரண்டாம் நிலைக் கல்விக்காக உரிய ஆண்டில் தரம் 12 இல் சேர்ந்து க.பொ.த. (உயர்தர) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவ மாணவிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவ மாணவிகள் க.பொ.த. (உயர்தர) கற்கும் 02 ஆண்டு காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.6,000/- வீதம் 24 புலமைப்பரிசில் தவணைகள் வழங்கப்படும். உரிய புலமைப்பரிசில் தொகை புலமைப்பரிசில் பெறுநர்கள் பெயரில் உள்ள வங்கி கணக்கில் மாத்திரம் மாதாந்தம் நேரடியாக வைப்புச் செய்யப்படும். புலமைப்பரிசில் பெறுநர் பெயரில் வங்கி கணக்கு இல்லாதிருப்பின், புதியதொரு வங்கி கணக்கு ஆரமபித்தல் வேண்டும்.

5.2 குறித்த புலமைப்பரிசில் பெறுநர் ஏதேனும் ஒரு காரணத்திற்காக தான் கல்வி கற்கும் பாடசாலையில் இருந்து விலகி வேறு ஒரு பாடசாலையில் அனுமதிக்கப்படுவாராயின் அதனை அத்தாட்சிப்படுத்தும் கடிதம் ஒன்று அதிபரால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்படல் வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளரால் அதுபற்றி சனாதிபதி நிதியத்துக்கு துரிதமாக அறிவிக்கப்படல் வேண்டும்

5.3 குறித்த புலமைப்பரிசில் பெறுநராலும் தான் வேறு ஒரு பாடசாலையில் அனுமதிக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிட்டு புதிதாக சேர்ந்த பாடசாலையின் பெயர் குறிப்பிடப்பட்ட கடிதம் ஒன்றைத் தான் தற்போது கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## 06. புலமைப்பரிசில் கண்காணிப்பு

**6.1** தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர்களின் பெயர் பட்டியலை மாகாண மட்டத்தில், வலய மட்டத்தில் தயார் செய்து அப்பெயர் பட்டியல் சனாதிபதி நிதியம் மூலம் ஒவ்வொரு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பப்படுவதுடன் வலய மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுநர்களைக் கண்காணித்தல் அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்காக ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை வலயக் கல்விப் பணிப்பாளர் நியமித்தல் வேண்டும்.

**6.2** மாகாண மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுநர்களைக் கண்காணித்தல் ஏற்புடைய மாகாண செயலாளர்கள்/ பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கான பொறுப்பு ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**6.3** தேசிய மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுநர்களைக் கண்காணித்தல் கல்வி அமைச்சு மற்றும் சனாதிபதி நிதியம் மூலம் மேற்கொள்ளப்படும்.

## 07. புலமைப்பரிசில்களை இரத்துச் செய்தல்

7.1 பின்வரும் காரணங்களினால் இப்புலமைப்பரிசில் பெறுநர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களை இரத்துச் செய்யும் அதிகாரம் சனாதிபதி நிதியத்துக்கு உண்டு.

I. புலமைப்பரிசில் பெறுநர் ஒழுக்கத்துக்கு முரணாக செயற்பட்டமையால் தண்டனை விதிக்கப்படல்
II. தொடர்ச்சியாக பாடசாலைக்கு சமூகமளிக்காமை
III. தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கைகளில் இருந்து நீங்குதல்
IV. க.பொ.த.(உயர்தர) கல்வியை பூர்த்தி செய்யாது பாடசாலையை விட்டு விலகுதல்
V. கட்டணம் செலுத்தும் /சர்வதேச பாடசாலை ஒன்றில் சேர்தல்

## 08. காலச் சட்டகம்

| | பணி | காலம் (ஏற்புடைய பணியை நிறைவு செய்ய வேண்டிய இறுதித் திகதி) |
|---|---|---|
| 8.1 | விண்ணப்பம் கோரல் | 2024 மே மாதம் 03 ஆம் திகதி |
| 8.2 | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஏற்புடைய சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் சனாதிபதி நிதியத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் | 2024 மே மாதம் 22 ஆம் திகதி/ அதற்கு முன்னர் |
| 8.3 | சனாதிபதி நிதியம் மூலம் புலமைப்பரிசில் பெறுநர்களை வலய ரீதியில் தரம் பிரித்து தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர்களின் பெயர்ப்பட்டியலை தயாரித்தல் | 2024 மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் |
| 8.4 | தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர்களின் பெயர்ப்பட்டியல்களை சனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ Face Book பக்கத்தில் வெளியிடுதல் மற்றும் வலய மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர்களின் பெயர்ப்பட்டியல்களை வழங்குதல் | 2024 மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் |

மேற்குறித்த பணி மேற்கொள்ளப்பட்டு முடிந்தவுடன் தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர்களுக்காக புலமைப்பரிசில் வழங்குதல் மேற்கொள்ளப்படும்.

இந்த சுற்றறிக்கை தொடர்பில் உருவாகும் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பாக சனாதிபதியின் செயலாளரிடம் வினவி கல்வி அமைச்சின் செயலாளரால் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**செயலாளர்,**
கல்வி அமைச்சு

பிரதி:- 01. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி அலுவலகம்
02. செயலாளர், சனாதிபதி நிதியம்